بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *06/01/2023* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**வக்ஃபே ஜதீதின் 65 ஆம் ஆண்டின் போது ஜமாஅத்தினர்கள் சார்பாக செய்யப்பட்ட பொருள் தியாகங்கள் பற்றிய குறிப்பும், 66 ஆம் ஆண்டின் துவக்கம் பற்றிய அறிவிப்பும்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

لَنۡ تَنَالُوا الۡبِرَّ حَتّٰی تُنۡفِقُوۡا مِمَّا تُحِبُّوۡنَ ۬ؕ وَ مَا تُنۡفِقُوۡا مِنۡ شَیۡءٍ فَاِنَّ اللّٰہَ بِہٖ عَلِیۡمٌ ﴿۹۳﴾

"நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருள்களிலிருந்து (இறைவனுக்காகச்) செலவு செய்யாத வரையில் உங்களால் ஒருபோதும் முழுமையான நன்மையினைப் பெறமுடியாது. நீங்கள் எப்பொருளைச் செலவு செய்கின்றீர்களோ அதனை நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிகின்றான்." **(திருக்குர்ஆன் 3: 93)**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கம் அளித்தவாறு கூறுகிறார்கள்: இரட்சிப்பை அடையச் செய்கின்ற உண்மையான நன்மையினை, நீங்கள் இறைவனின் வழிதனில் உங்களுக்கு பிடித்தமான செல்வத்தையும் பொருள்களையும் செலவு செய்தாலே அன்றி அடைய முடியாது. எனவே அல்லாஹுத்தஆலா பொருள் தியாகத்துக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளான் என்றால் இறைவனை திருப்தி அடைய செய்கின்ற உண்மையான நன்மை என்பது, அது இறைவனது திருப்தியை பெறுவதற்காக செய்யும் பட்சத்தில்தான், தனக்கு விருப்பமான பொருளை இறைவனது திருப்தியை பெறுவதற்காக படைப்பினங்கள் மீதான அனுதாபத்தில் செலவு செய்கின்ற போதுதான் உண்மையான நன்மையாக கணக்கிடப்படும். மேலும் பிறகு அந்த தியாகம் இரட்சிப்பின் வழிமுறையாக ஆகின்றது.

அல்லாஹுத்தஆலாவின் வழியில் ஒருவரது விருப்பத்திற்குரிய செல்வம் தான் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அவர் தியாகம் செய்து அல்லாஹ்வின் விருப்பத்தை பெறுவதற்காக அதனை வழங்குவதுதான் உண்மையான நன்மையாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: உலகில் மனிதன் செல்வத்தின் மீது மிக அதிக நேசம் கொள்கின்றான். உண்மையான இறையச்சம் மற்றும் ஈமானை பெறுவதற்காக,

لَنۡ تَنَالُوا الۡبِرَّ حَتّٰی تُنۡفِقُوۡا مِمَّا تُحِبُّوۡنَ

**'**நீங்கள் உங்களுக்கு பிடித்தமான பொருளிலிருந்து செலவு செய்யாத வரை ஒருபோதும் நன்மையை அடைய முடியாது**'** என்று கூறியுள்ளான். ஏனென்றால்

இறைவனது படைப்பினங்களுடனான அனுதாபம் மற்றும் நன் நடத்தையின் ஒரு பெரும் பகுதி செல்வத்தை செலவு செய்வதன் அவசியத்தை எடுத்துரைக்கின்றது. சக மனிதர்களின் நலம் மற்றும் இறை படைப்பினங்கள் மீதான அனுதாபம் எப்படிப்பட்டதொரு விஷயம் என்றால் அது ஈமானின் இரண்டாவது பகுதியாகும். அது இல்லாமல் ஈமான் முழுமையடைவதில்லை; உறுதி பெறுவதில்லை. மனிதன் தியாகம் செய்யாத வரை மற்றவர்களுக்கு எவ்வாறு பலனளிக்க முடியும்? இந்த வசனத்தில் அந்த தியாகத்தின் போதனை மற்றும் வழிகாட்டல் வழங்கப்பட்டிருக்கின்றது. எனவே, செல்வத்தை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதும் மனிதனது நற்பேறு மற்றும் இறையச்சத்தின் தரம் மேம்படுவதற்கு காரணியாக விளங்குகின்றது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது வாழ்வில் இறைவனுக்காக அர்ப்பணித்தலின் தரம் மற்றும் அந்த அளவுகோள் எவ்வாறு இருந்தது என்றால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஒரு தேவையை எடுத்துரைத்ததும் அன்னார் தமது வீட்டின் அனைத்து பொருள்களையும் கொண்டு வந்து சமர்ப்பித்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலகட்டத்திலும் அன்னாரது மிஷனை முழுமைப்படுத்துவதற்காக புத்தக வெளியீடு மற்றும் இஸ்லாத்தின் பிரச்சார பணிகளுக்காக மேன்மையான உதாரணத்தை ஹஸ்ரத் ஹக்கீம் மவ்லானா நூருத்தீன் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் நிலைநாட்டினார்கள். அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம், நான் தங்களது வழியில் அர்ப்பணமாகியுள்ளேன். என்னிடம் இருப்பவை என்னுடையது அல்ல; தங்களுடையதாகும். மதிப்பிற்குரிய தலைவரே, வழிகாட்டியே! நான் முழு உண்மையுடன் கூறிக் கொள்வது, என்னுடைய அனைத்து செல்வமும், பொருளும் மார்க்க பிரச்சாரத்திற்காக செலவிடப்படுமே என்றால் நான் என்னுடைய நோக்கத்தை அடைந்து விடுவேன் என்று எழுதினார்கள்.

அதே போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது பல ஸஹாபிகள் தத்தமது ஆற்றலுக்கு ஏற்ப எவ்வாறான தியாகங்களை செய்தார்கள் என்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், அந்த தியாகங்களைக் கண்டு எனக்கு வியப்பு ஏற்படுகின்றது என்று கூறுகிறார்கள். மேலும், இந்த தியாகங்களின் ஆர்வம் ஜமாஅத் மக்களிடம் எவ்வாறு ஏற்பட்டுள்ளது என்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு பிறகு தொடர்கின்ற கிலாஃபத் அமைப்பிலும் அல்லாஹுதஆலா எல்லா காலகட்டத்திலும் தியாகங்கள் செய்யக்கூடியவர்களை வழங்கிக் கொண்டே செல்கின்றான். அவர்கள் தமது விருப்பங்களை முதுகுக்கு பின்னால் எறிந்துவிட்டு தியாகங்கள் செய்து வருகின்றனர். ஜமாஅத் மக்கள் அல்லாஹ்வின் அருளால் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு இதில் பங்கு பெறுகிறார்கள். எவ்வாறான உதாரணங்கள் உள்ளன என்றால், தியாகங்கள் செய்கின்றவர்கள் பௌதீக ஆதாயம் பெறுவது மட்டுமின்றி அவர்களது ஈமானிலும் முன்னேற்றம் ஏற்படுகின்றது.

*ஹுஸூர் அன்வர் அவர்கள் பல்வேறு நாடுகளில் உள்ள ஜமாஅத் மக்களின் பொருள் தியாகங்களின் ஈமானுக்கு வலுவூட்டும் சம்பவங்களை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:*

➢ **லைபீரியாவின்** ஒரு முஅல்லிம் ஸாஹிப் எழுதுகிறார்கள். வக்ஃபே ஜதீத் சந்தா வசூல் செய்வதற்காக புதிய அஹ்மதிகளின் ஒரு ஜமாஅத்தில் ஒரு காதிமின் வீட்டிற்கு சென்றேன். அவரது தாயார் வீட்டில் பணம் இல்லை என்று வருத்தம் தெரிவித்தார்கள். நாங்கள் திரும்பி வந்து விட்டோம். சிறிது நேரத்திற்கு பிறகு அந்த காதிம் ஓடி வந்தார். தனது பள்ளி கட்டணம் 250 லைபீரியன் டாலரை சந்தாவாக கொடுத்து எங்களது வீடு இத்திட்டத்தில் இருந்தும் விலக்கப்பட்டதாக இருக்கக் கூடாது என்று கூறினார். சில நாட்களுக்குப் பிறகு அந்த காதிம், எனது ஒரு உறவினர் எனது பள்ளி தேவைகளுக்காக 2500 டாலர் பணத்தை எனக்கு அனுப்பியுள்ளார். அதிலிருந்து பள்ளி கட்டணத்தையும் செலுத்தி விட்டேன்; இதர தேவைகளையும் பூர்த்தி செய்து விட்டேன். அல்லாஹ் எனது தியாகத்தை விட பத்து மடங்கு அதிகமாக கூலியை எனக்கு வழங்கி இருக்கின்றான் என்று கூறினார்.

இவ்வாறு அல்லாஹுத்தஆலா உள்ளங்களில் ஈமானையும், உறுதியையும் ஏற்படுத்துகின்றான்.

➢ **இந்தியாவிலிருந்து** வக்ஃபே ஜதீதின் இன்ஸ்பெக்டர் ஸாஹிப் கூறுகிறார்கள்: தமிழ்நாட்டின் மேலப்பாளையம் ஜமாஅத்தில் ஒரு கலப்பற்ற அஹ்மதி உள்ளார். அவர் 2014 ஆம் ஆண்டு பைஅத் செய்திருந்தார். அவர் கூறுகிறார்; நான் பைஅத் செய்திருந்த போது அச்சமயம் எனது வக்ஃபே ஜதீதுக்கான வாக்குறுதி நான்காயிரம் ரூபாய் என எழுதி அதனை செலுத்தி இருந்தேன். ஏனென்றால் அவ்வளவு தான் என்னிடம் இருந்தது. ஒவ்வொரு வருடமும் அதற்கு பிறகு வாய்ப்புக்கேற்ப அதிகப்படுத்திக் கொண்டே சென்றேன். அல்லாஹுத்தஆலா அதன் காரணத்தினால் வியாபாரத்திலும் சிறப்பான முன்னேற்றத்தை வழங்கிக் கொண்டே சென்றான். பிறகு சில காலகட்டத்திற்குப் பிறகு வீட்டின் பிற உறுப்பினர்களும் பைஅத் செய்து விட்டார்கள். அல்லாஹுத்தஆலாவின் அருளால் இன்று எனது வக்ஃபே ஜதீது சந்தாவின் பட்ஜெட் 5 லட்சம் ரூபாயாக ஆகிவிட்டது. மேலும், லாக் டவுன் இருந்தும் கூட சந்தாக்களின் அருளின் காரணத்தினால் எனது வியாபாரத்தில் எனக்கு எவ்வித இழப்பும் ஏற்படவில்லை. மேன்மேலும் அதிகரித்துக் கொண்டே சென்றது. அல்லாஹ்வின் அருளால் தற்போது வியாபாரத்தை இந்தியாவிற்கு வெளியே தாய்லாந்திலும் விரிவு படுத்தி விட்டேன்.

இவையே அல்லாஹ் தஆலாவின் அருளாகும். சூதாட்டம் போன்றது அல்ல இந்த வியாபாரம். பணத்தை முதலீடு செய்தார். கடினமாக உழைத்தார். வியாபாரம் செய்தார். அல்லாஹுத்தஆலாவின் வழியில் செலவு செய்ததனால் அல்லாஹுத்தஆலா பல மடங்கு முன்னேற்றத்தையும் வழங்கினான்.

➢ பிறகு **இந்தியாவின் இன்னொரு உதாரணம்.** மலப்புரம் கேரளாவின் முபல்லிக் இன்சார்ஜ் எழுதுகிறார்கள்: நாஸிம் ஸாஹிப் மால் மற்றும் வக்ஃபே ஜதீதின் இன்ஸ்பெக்டர் ஆகியோர் நிதியாண்டு இறுதி அடைந்ததை கருத்தில் கொண்டு சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அங்கு ஒரு கலப்பற்ற அஹ்மதியான ஒரு தொழிலதிபர், ரஹ்மான் சாஹிப் அவர்களுடைய போன் வந்தது. “தாங்கள் என்னுடைய கம்பெனிக்கு வாருங்கள். நான் என்னுடைய கம்பெனியின் ஒரு புது பகுதியினை கட்டியுள்ளேன். அங்கு துஆ செய்ய

**வேண்டும்'' என்று கூறினார். நாங்கள் அங்கு சென்றதும் ஒன்றும் கேட்காமல் பத்து லட்ச ரூபாய் செக்கை நீட்டினார்கள். இந்தத் தொகையை நான் ஒரு property - யின் ரிஜிஸ்டரிக்காக வைத்திருந்தேன். ஆனால் தங்களது வருகையின் காரணத்தினால் கொடுத்து விட்டேன். ரிஜிஸ்டரியின் தேதியை தள்ளி வைத்து விட்டேன் என்று கூறினார்கள்.**

**சில நாட்களுக்கு பிறகு ஒரு பெருந்தொகை அன்னாருக்கு எவ்வித குறிப்பிடும்படியான முயற்சியும் இன்றி கிடைத்துள்ளது. அது அன்னாருடைய தேவைக்கும் மிக அதிகமாக இருந்தது என்று அவர்கள் கூறினார்கள்.**

- **இந்தோனேஷியாவின் அமீர் ஸாஹிப் எழுதுகிறார்கள்: ஒரு சிறிய ஜமாஅத்தைச் சார்ந்த அப்துர் ரஹீம் ஸாஹிப் அவர்கள் கூறுகிறார்கள். ஒவ்வொரு வருடமும் வக்ஃபே ஜதீத் சந்தாவை செலுத்தி வருகிறேன். 2019 மற்றும் 2020 எனக்கு மிகவும் கடினமான வருடங்களாக இருந்தன. புதிய வியாபாரம் செய்த காரணத்தினால் பணியை விட்டிருந்தேன். வியாபாரமும் சரியாக நடக்கவில்லை. சேமிப்பும் முடிந்துவிட்டது. வக்ஃபே ஜதீதின் வாக்குறுதியை செலுத்த எவ்வித வழியும் உருவாகாமல் இருந்தது. தினசரி தஹஜ்ஜுதில் துஆ செய்து வந்தேன். கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கும் கடிதம் எழுதினேன். எவ்வாறாகிலும் ஏதோ ஒரு விதத்தில் எனது வாக்குறுதியை முழுமைப்படுத்தினேன். சில நாட்களுக்குப் பிறகு, எங்கு நான் ஏழு வருடங்கள் முன்பு வேலையை விட்டு விட்டு வந்தேனோ அங்கிருந்தே வேலைக்கான அழைப்பு வந்தது. இது அல்லாஹுத் தஆலாவின் அருள் மட்டுமே ஆகும். 51 வயதிலும் ஒரு நிரந்தர வருவாயின் வழி பிறந்து விட்டது.**

*ஹுஸூர் அன்வர் அவர்கள் செனிகல், சீராலியோன், கேம்பியா, காங்கோ கின்ஷாஸா மற்றும் மெஸடோனியாவின் ஜமாஅத் மக்களின் ஈமானுக்கு வலுவூட்டும் சில சம்பவங்களை எடுத்துரைத்த பிறகு கூறினார்கள்:* **அல்லாஹ் இந்த தியாகங்கள் செய்கின்றவர்களுக்கு, அவர்கள் தம் தரத்தை உயர்த்துவதற்கு நல்வாய்ப்பினை வழங்குவானாக. மிக நல்ல நிலைமையில் இருந்தாலும் சிலரது தியாகம் உயர்ந்த படித்தரத்தை உடையதாக இருப்பதில்லை. அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றினை புரிந்து கொள்பவர்களாக ஆக வேண்டும். அன்னார் கூறுகிறார்கள்: 'இறைவன் உங்களது தொண்டுகளின் சிறிதும் தேவையற்றவன் ஆவான். உங்களுக்கு தொண்டாற்றும் வாய்ப்பினை வழங்கியது அவன் உங்கள் மீது செய்த பேரருள் ஆகும்.' அல்லாஹுத்தஆலா ஜமாஅத்தின் செல்வந்தர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த கூற்றினை புரிந்து கொள்ளும் நல்வாய்ப்பை வழங்குவானாக.**

*ஹுஸூர் அன்வர் அவர்கள் 2023 ம் ஆண்டில் வக்ஃபே ஜதீதின் 66 -வது ஆண்டின் அறிவிப்பை செய்தவாறு கூறினார்கள்:* **வக்ஃபே ஜதீத் சந்தாவில் கடந்த வருடம் ஜமாஅத் மக்கள் ஒரு கோடியே 22 லட்சத்து 15 ஆயிரம் பவுண்டு தொகையை தியாகம் செய்துள்ளார்கள். இது உலகின் பொருளாதார சூழ்நிலை நன்றாக இல்லாத போதிலும் கடந்த ஆண்டை விட ஒன்பது லட்சத்து 28 ஆயிரம் பவுண்ட் அதிகமாகும். அல்ஹம்துலில்லாஹ்!**

*ஹுஸூர் அன்வர் அவர்கள் அதற்குப் பிறகு* ***வசூலை பொருத்தவரையில் உலகின் பல்வேறு ஜமாஅத்துகளின் தரவரிசை பட்டியலை அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் தரவரிசை பட்டியலின் முதல் 10 ஜமாஅத்துகள் இவ்வாறாகும்;***

பிரிட்டன், கனடா, ஜெர்மனி, அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, மிடில் ஈஸ்டின் ஒரு ஜமாஅத், இந்தோனேஷியா, மிடில் ஈஸ்டின் ஒரு ஜமாஅத் மற்றும் பெல்ஜியம்.

**தனிநபர் சந்தாவின் அடிப்படையில் நாடுகளின் தரவரிசை இவ்வாறாகும்;** அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா.

**ஆப்பிரிக்காவில் ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் முதல் பத்து ஜமாஅத்துகள்;** கானா, மொரிஷியஸ், நைஜீரியா, புருக்கினோ ஃபாஸோ, தன்ஸானியா, லைபீரியா, கேம்பியா, யுகாண்டா, பெனின், மற்றும் ஸீராலியோன் ஆகியவை.

இவ்வருடம் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையில் 61 ஆயிரம் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஒட்டுமொத்த எண்ணிக்கை 15 லட்சத்து 6 ஆயிரமாக ஆகிவிட்டது.

*ஹுஸூர் அன்வர் அவர்கள் பிரிட்டன், கனடா, ஜெர்மனி, அமெரிக்கா, பாகிஸ்தான், இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவின் ஜமாஅத்துகளின் தரவரிசை பட்டியலை அறிவித்தார்கள். அதனடிப்படையில்* ***வசூலின் அடிப்படையில் இந்தியாவின் முதல் 10 மாநிலங்கள்;*** கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, ஜம்மு காஷ்மீர், தெலுங்கானா, ஒடிஷா, பஞ்சாப், வெஸ்ட் பெங்கால், மகாராஷ்டிரா, டெல்லி.

**முதல் 10 ஜமாஅத்துகள்;** கோயம்புத்தூர், ஹைதராபாத், காதியான், கருளாயி, பத்தபிரியம், பெங்களூர், மேலப்பாளையம், கல்கத்தா, காலிகட் மற்றும் கேரங் ஆகியவை.

*ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:* கலந்து கொண்ட அனைவரின் செல்வங்களிலும் உயிரிலும் அல்லாஹுத்தஆலா அளவற்ற அருளை வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)**